ARTICLE 07 · கட்டுரை 07 | பக்தி இலக்கியம்

Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 45–51

# தற்சிறுமைக் கோட்பாடு

*Theory of Self-Deprecation*

**முனைவர் ப. தீபா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019

***Dr. P. Deepa**, Assistant Professor, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Tiruchirappalli – 620 019*

**மின்னஞ்சல்:** cdeepa3875@gmail.com · **ORCID:** https://orcid.org/0009-0004-5015-4689

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ப் பக்தி இலக்கியங்களில், குறிப்பாக மாணிக்கவாசகரின் திருவாசகத்தில், மையமான அழகியல் கூறாக விளங்கும் தற்சிறுமைக் கோட்பாட்டை இவ்வாய்வு ஆராய்கிறது. தொல்காப்பிய இலக்கண விதிப்படி தன் + சிறுமை எனப் புணர்ந்து உருவாகும் ‘தற்சிறுமை’ என்னும் சொல், அடியவர் இறைவன் முன் தம்மைத் தாமே விரும்பித் தாழ்த்திக் கொள்வதைக் குறிக்கிறது; முழுமையான சரணாகதித் தத்துவத்தின் இலக்கிய வெளிப்பாடாகவும் அது அமைகிறது. காதலிலும் வீரத்திலும் சங்க இலக்கியம் கையாளும் தற்பெருமையிலிருந்தும், ஒருவரின் பெருமையைப் பிறர் வாயிலாக வெளிப்படுத்தும் பெருமிதத்திலிருந்தும் (கண்ணகியைக் கவுந்தியடிகள் போற்றுவது போல) இது வேறுபட்டது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், தாயுமானவர் முதலான அருளாளர்கள் பேராற்றலும் புலமையும் பெற்றிருந்தும், இறையருளைப் பெறும் பொருட்டுத் தம்மை நாயினும் கடையராக, எளியவராகச் சித்திரிக்கின்றனர். வ.சுப. மாணிக்கம் ‘உயிர்ப்பாடல்’ எனப் போற்றும் திருவாசகம், ‘உற்றாரை யான் வேண்டேன்’, ‘இன்பே அருளி எனையுருக்கி’ போன்ற அடிகளின் வழி இறைவனை நாடும் உயிரின் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறது. முழுமையான தன்னொப்படைப்பின் வழி விரைவில் முத்தியை அடைவதற்குத் தற்சிறுமையே இன்றியமையாத நெறி என்று இவ்வாய்வு முடிவு செய்கிறது.

**திறவுச்சொற்கள்:** திருவாசகம்; தற்சிறுமை; சரணாகதி; மாணிக்கவாசகர்; பக்தி

## Abstract

This study examines Tharsirumai Kottpadu (self-deprecation) as a central aesthetic in Tamil Bhakti literature, particularly in Manickavasagar's Thiruvasagam. Tharsirumai, formed as Than + Sirumai per Tholkappiyam grammar, signifies the devotee's voluntary self-belittlement before God and is the literary manifestation of the Saranagathi philosophy of complete surrender. Unlike Sangam Tharperumai used for love and valour, or Perumitham where one's greatness is revealed through others (e.g., Kavunthiyadigal praising Kannagi), Bhakti saints like Sambandar, Appar, Sundarar, Manickavasagar and Thayumanavar, despite their immense spiritual and poetic prowess, portray themselves as insignificant and lower than a dog to attain divine grace. Thiruvasagam, described by V. Sub. Manickam as Uyir-padal, exemplifies this through verses like "Urrarai yaan vendan" and "Inbe aruli enai urukki", showing the soul's longing for God, and the paper concludes that Tharsirumai is the essential path to quick mukthi through total self-surrender.

**Keywords:** Thiruvasagam; Tharsirumai; Saranagathi; Manickavasagar; Bhakti

## முன்னுரை

தமிழ்நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்தவர்கள் சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், காரைக்காலம்மையார், சேக்கிழார், முதலாழ்வார்கள் முதலிய ஆழ்வார்களும் பக்தி நெறியைப் பரப்பி தமிழகத்தைச்

செழிக்கச் செய்தனர். அவர்களின் பக்திநெறி போற்றுதற்குரியது. அருட்கவிஞர்கள் தன் பாடல்களைப் பக்தி சுவை மிளிர பாடி உள்ளனர். மேலும் தன் பாடல்களில் இறைவனின் புகழை எடுத்தியம்பும் நிலையில் அருளாளர்கள் தங்களைத் தாழ்த்தி கொண்டு இறைவனின் புகழைப் பறைசாற்றி உள்ளனர். இதனைத் ‘தற்சிறுமை’ என்று கூறுவர். இத்தற்சிறுமைப் பற்றி இவ்வியல் தொகுத்து உரைக்கிறது.

## தற்சிறுமைக் கோட்பாடு

> னகார இறுதி வல்லெழுத் தியையின்
> றகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே[1]

என்ற தொல்காப்பிய விதிப்படி த(ன்) + சிறுமை = த(ற்)சிறுமை என்று உருவாகும்.

தற்சிறுமை எனும் சொல், தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்வது என்று பொருள்படும். இறைவனோடு இரண்டற கலப்பதற்குச் சரணாகதி தத்துவமே சிறந்தது என்பர் அருளாளர்கள். இச்சரணாகதி தத்துவத்தின் பிரதிபலிப்பே தற்சிறுமை என்கின்றனர். மேலும் இத்தற்சிறுமைக் கோட்பாட்டைப் பக்தி இலக்கிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம் பக்தி பாடல்களில் பின்பற்றியுள்ளனர்.

## பக்தி இலக்கியங்களில் பாவநிலை

பாரதியின் கண்ணன் பாட்டுக்கு விளக்கம் தரும் வ.வே.சு.ஐயர், 'கண்ணன் பாட்டானது பாவநிலையில் அமைந்த பாசுரங்களின் வழியையே தழுவியதாக இருக்கிறது என்றும், இஷ்ட தெய்வத்தைப் பல பாவங்களால் வழிபடலாகுமென்று நமது பக்தி சாஸ்திரங்கள் கூறுகின்றன என்கிறார்.

மேலும், இப்பாவநிலைப் பற்றி ப.அருணாசலம் கூறுமிடத்து, பாவத்தால் பகவானை வழிபடும் முறை தொன்று தொட்டுப் பக்தர்களாலும், கவிகளாலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. உரோமன் கத்தோலிக்க மதத்தில் கூட அடியார் வர்க்கத்தை நாயகியாகவும், கிறிஸ்துவை நாயகனாகவும் பாவித்து எழுதிய தோத்திரங்கள் பலவுள. நமது பாகவதத்தில் கோபிகைகளின் உபாக்கியானங்கள் எல்லாம் இப்பாவத்தைத் தழுவி எழுதப்பட்டவை. மகாபக்திமதியான மீராபாயி உலகத்திலுள்ள ஜீவகோடிகள் அனைத்தும் ஸ்தீரி பிராயம் என்றும், பகவான் ஒருவனே புருஷன் என்றும் பாவித்து பக்தி செய்திருக்கிறார் என்கிறார்.

## பிரபத்தி (அ) சரணாகதி தத்துவம்

சரணாகதி தத்துவமே பிரபத்தியாகும். இறையன்பில் உயர்ந்த நிலை பிரபத்தி. இது முற்றிலும் இறைவனைச் சரணடைதலாகும். பிரபத்திக்கு இன்றியமையாத தன்மைகளாக ஆறு கூறப்பெறும். அவை, இறைவனுக்கு விருப்பமானவற்றையே விழைதல், இறைவனுக்கு விருப்பமில்லாதவற்றைக் களைதல், அவன் தன்னைக் காப்பான் என்ற உறுதியான நம்பிக்கையோடிருத்தல், அவன் கவலை வேண்டி நிற்றல், இறைபணிக்குத் தன்னை அர்ப்பணித்தல், தாம் ஒன்றுமில்லை என்று எண்ணுதல் என்பன என்று ஆ.க.பார்த்தசாரதி குறிப்பிட்டுள்ளார்.

திருமங்கையாழ்வாரின் பாடல் ஒன்று இச்சரணாகதி தத்துவத்தை விளக்கும் விதமாக அமைந்துள்ளது.

பற்றே லொன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்
மற்றே லொன்றறியேன் மாயனே! எங்கள் மாதவனே
கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே

வைணவ சமயத்தில் தலைசிறந்து விளங்குவது சரணாகதி தத்துவமாகும் என்று கூறும் பார்த்தசாரதி. இதற்குச் சான்றாக, சரணமாகும் தன தாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்

..... வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே
சரணென் றுய்யப் போகல் அல்லால் இல்லைகண்டீர் சதிரே

என்ற நம்மாழ்வார் பாடல் வரிகளைச் சுட்டுகிறார். மேலும்,

அகல கில்லேன் இறையும் என்
அலர்மேல் மங்கை உறைமார்பா
நிகரில் புகழாய்! உலகமூன்
றுடையாய் என்னை ஆள்வானே
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன் றில்லா அடியேனுள்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

என்று கூறி நம்மாழ்வார் திருமால் திருவடிகளில் சரணடைகின்றார். இப்பாசுரம் வைணவர்கட்குச் 'சரமசுலோகம்' போல் இனிப்பதாகும். வைணவ தத்துவத்தில் கூறினால் சரணாகதியாக இருப்பது. தாய் தன் பாலுடன் மருந்தைக் குழைத்துத் தருவது போல ஆச்சாரியர்கள் பாசுரங்கட்கு உரை கூறும் போது வைணவ தத்துவம் அனைத்தையும் குழைத்துத் தந்து விடுகிறார்கள் என்றும், இப்பாசுரம் சரணாகதியைக் குறிப்பதால் இத்திருவாய் மொழி முழுவதும் சரணாகதி சாரமாயிருக்கும் என்று வைணவ ஆச்சாரியர்கள் கருதுகின்றனர் என்றும் ஆ.க.பார்த்தசாரதி தன் நூலில் குறிப்பிடுகின்றார்.

## பிரபத்தி நிலை

கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி என்கிற நான்கு வழிகளில் ஒன்றாகவே பக்தியைக் குறிப்பிடுகின்றனர். பக்தியின் முதிர்ச்சியாகிய பிரபத்தியும் ஞானத்தின் விளைவேயாகும் என்று கூறப்படுகிறது.

மேலும், இதனால் இறைவனைத் தஞ்சமடைகின்றவர்களுக்கு அவன் 'இலட்சியம்' என்ற அளவில் இல்லாமல் அவனே வழியாகவும் அமைந்துள்ளான் என்கின்றனர்.

பிரபத்தி நிலையினை விளக்கும் அறிஞர்கள்,

- இறையைன்றி வேறெவர்க்கும் வேறெதற்கும் நான் அடிமையில்லை.
- அவனையன்றி வேறெவரையும் வேறெதனையும் இன்பமாகக் கருதேன்.
- அவனையன்றி வேறெவரையும் வேறெதனையும் உபாயமாகக் கருதேன்.

என்ற மூன்று உறுதிகளை எடுத்துக் காட்டுகின்றனர் என்று ஆ.க.பார்த்தசாரதி குறிப்பிடுகின்றார்.

இப்பாவ அடிப்படையிலேயே தான் மாணிக்கவாசகரும் தன் திருவாசகத்தை அமைத்துள்ளார். இறைவனை ஆண்டனாகவும், தன்னை அடிமையாகவும் பாவித்து பாடல்களை இயற்றியுள்ளார். இவ்வனுபவ வெளிப்பாடாகத் தான் பிரபத்தி நிலையில்

தன்னைப் பல இடங்களில் தாழ்த்திக் கொண்டுள்ளார். இத்தாழ்வு மனப்பான்மையே இறைவனிடம் தன்னை இரண்டற இணைக்கும் செயலாகும் என்பதை உணர்ந்து தன் திருவாசகத்தைப் படைத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

## தற்சிறுமைச் சிந்தனை

வ.சுப.மாணிக்கம், தற்சிறுமைப் பற்றிக் கூறுமிடத்து, 'பெருமை பேசுவோரைப் பார்க்கின்றோம். தற்பெருமை பேசுவோரையும் பார்க்கின்றோம். தற்சிறுமைத் தாமே பேசிக் கொள்பவரையும், பாடி கொள்பவரையும் தெய்வ பாசுரங்களில் அன்றி வேறு எங்கே பார்க்க முடிகின்றது என்கிறார்.

அக இலக்கியம் காதலர்களுக்குள் தற்பெருமைப் பேச இடங்கொடுத்துக் காதலுணர்வை வளர்க்கும் என்றும், புறவிலக்கியம், 'ஒன்னார் முன் நெடுமொழி கூற இடங்கொடுத்து வீரவுணர்வை வளர்க்கும் என்றும், அருளிலக்கியமோ இறைவன் முன் தற்சிறுமைப் பேசவைத்து அன்புணர்வை வளர்க்கும் என்றும் குறிப்பிடுகின்றார்.

## காதலில் தற்பெருமை

களவு புணர்ச்சியால் தலைவியின் நுதலொளி கண்டு காம வருத்தம் உற்ற தலைவனது கூற்றாக,

> ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
> நண்ணாரும் உட்குமென் பீடு

என்ற குறள் அமைகிறது.

இக்குறளில் தலைவன் என் வலி எத்தகையது என்றால் போர்க்களத்து, நேரில் என்னை எதிர்த்துத் தோல்வி கண்டவரிடம் கேட்டவர்கள் நடுங்குவார்கள்.

கண்டாரும் கண்டார் வாய் கேட்டாரும் பாராட்டும் என் மறப்பெருமை இவள் சிறுநுதலுக்குப் பள்ளிக் களத்துப் புறங்காட்டிவிட்டதே என்று கூறுகிறான்.

ஆனால், பரிமேலழகர் இக்குறள் விளக்கத்தில் 'நண்ணாரும் உட்கும் என்பீடு' என்பது தற்புகழ்ச்சி ஆகாது என்கிறார். தற்புகழ்ச்சி இல்லையேல் அது தற்சிறுமையா! என்று வ.சுப. எதிர்வினா எழுப்பி விடை தருகிறார். அதாவது புணர்ச்சியின்பம் நோக்கி மனைவி முன்பு சொல்லிக் கொள்ளுதலின் அது தற்சிறுமையும ஆகாது என்கிறார்.

## வீரத்தில் தற்பெருமை

காதலில் தற்பெருமை எவ்வாறு ஏற்று கொள்ளப்படுகிறதோ அதே போல் வீரத்தில் தற்பெருமை பேசுவதும் குற்றம் ஆகாது ஆனால்,

> தோன்றா தோற்றி துறைபல முடிப்பினும்
> தானதற் புகழ்தல் தகுதியன்றே

என்ற நூற்பா தற்புகழ்தல் தகுதியில்லை என்கிறது. இந்நிலையில்,

> மன்ன உடை மன்றத் தோலை தூக்கினும்
> தன்னுடை யாற்றல் உணறார் இடையினும்
> மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
> தன்னை மறுதலை பழித்த காலையும்
> தன்னைப் புகழ்தலும் தாகும்புல வோற்கே

என்ற நூற்பாவில் தற்புகழ்தல் சில இடங்களில் தகும் என்கிறது. இந்நூற்பா கூறுவது போல தற்புகழ்ச்சி புலவர்க்கு மட்டும் உடைமையன்று. வஞ்சினம் என்பது

புறத்திணையில் ஒரு புகழ்த்துறை, இத்துறைலில் மறவர்கள் தம் பெருமையைத் தாமே எடுத்து அறைவர். பூதப்பாண்டியும், தலையானங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன், சோழன் நலங்கிள்ளி என்ற மூவர் தம் வஞ்சினப்பாக்களில் இல்லறப் பெருமை, செங்கோற் பெருமை, நட்பு பெருமை, குடி பெருமை, என்பவற்றைத் தம் வாயால் தாமே பறைசாற்றிக் கொள்வதில்லை என்று வ.சுப. சுட்டிக் காட்டுகிறார்.

மேலும்,

மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னோடு பொருதும் என்ப

(புறம்.71)

படுமணி யிரட்டும் பாவடிப் பனைத்தாள்
நெடுநல் யானையும் தேருவம் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது உடல் சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை

என்ற பாடல் வரிகளில் வேற்று வேந்தர் தம் பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதைக் கேட்க பொறாமை படுவதைக் காண முடிகிறது. பகைவரைத் தாழ்த்தித் தம்மை உயர்த்தி கொள்வதெல்லாம் வீரப் பொது மரபு என்பது வ.சுப.வின் கருத்தாகும். இக்கருத்தைத்

துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்

என்று தொல்காப்பியமும் உறுதி செய்கிறது.

## பெருமிதம்

சிலர் தம் பெருமையைத் தாமே சொல்ல மாட்டார்கள். புலவனும் அவர்களை அங்ஙனம் சொல்ல வைக்க மாட்டான். பாத்திரப்பெருமை புலப்படுத்துவதற்கென்று வேறு சில பாத்திரங்களைப் புலவன் படைப்பான்.

யாரென விளம்பு கேள் நான் எங்குலத் தலைவற் கும்மை
வீரநீர் பணித்திர் என்றான் மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழல் இளைய வீரன் மரபுளி வாய்மையாதும்
சோர்விலன் நிலையை யெல்லாம் தெரிவுறச் சொல்லலுற்றான்

இதில் இராம, இலக்குவ, அனுமன் முச்சந்திப்பில் இராமன் ‘தான் யார்’ என்பதைச் சொல்லவில்லை. இலக்குவன், ‘அண்ணனின் குடிபிறப்பு, வேள்வி காப்பு, அரசு துறப்பு, மனைவியிழப்பு எல்லாம் வரன்முறையாக உரைக்கின்றான். அதே போல்,

கற்புக்கடம் பூண்ட இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டில மால்

என்று கவுந்தியடிகள், கண்ணகியின் கற்பு பெருமையை மாந்திரிக்குச் சொல்வதும்,

இம்மைச் செய்தன யானறி நல்வினை

என்று மாடலன் கோவலனது இளமைத் தொண்டுகளைச் சொல்வதும் எல்லாம் பிறர் வாய்ப்பெருமையாகும்.

இச்செய்திகளிலிருந்து வ.சுப. ‘தற்பெருமையை வெளிப்படையாகச் சொல்ல நாணினாலும் தனக்கு ஒரு பெருமையுண்டு என்ற எண்ணம் உள்ளதளவில்

எல்லார்க்கும் கிடைக்கின்றது. இவ்வுளப்பெருமை தற்பெருமை ஆகாது ‘பெருமிதம்’ எனப்படும் என்கிறார்.

## பக்தியில் தற்சிறுமை

காதலிலும், வீரத்திலும் தற்பெருமைப் பேசும் இலக்கிய மரபு போன்று அருள் நூல்கள் தற்சிறுமைப் பேசுகிறது.

ஞானசம்பந்தர் முதலான அருளாளர்கள் மருட்கை நிகழ்ச்சிகளைப் புரிந்தவர்கள். ஆற்றலிலும், அறிவிலும், புலமையிலும், நிகரற்றவர்கள் நாட்டையும் அரசையும் மன்பதையையும் மாற்றி அமைத்தவர்கள் உரமும் ஊற்றும் வழி வழி ஊட்ட வல்ல பாடல்களை ஆயிரக்கணக்காக அருள்பவர்கள். இவ்வளவு பெரியவர்கள் தங்களை நாயினும் சிறியவர்களாகத் தம்மைப் பழித்தும் இழித்தும் தாழ்த்திப் பாடி கொள்வதைப் பக்தி இலக்கியங்களில் காண முடிகின்றது.

> மாயத்தை அறிய மாட்டேன் மையல்கொள் மனத்தனாகிய
> பேயொத்துக் கூகை யானேன் பிஞ்ஞகா பிறப்பொன்றில்லி

என்று அப்பரும்,

> நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துள்ளுனைப்
> பேயாய்த் திரிந்தேய்த்தேன்

என்று சுந்தரரும்,

> வஞ்சனையும் பொய்யுமுன்னே வைத்தமுக்கா றாயுளறும்
> நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான் பராபரமே

என்று தாயுமானவரும்

> மதிகெட் டறவா டிமயங்கியறக்
> கதிகெட் டவமே கெடவோ கடவேன்

என்று அருணகிரிநாதரும் தங்களைத் தாமே தாழ்த்திக் கொண்டு உள்ளனர்.

பொதுவாக அருட்புலவர்கள் தம்மைச் சிறுமைப்படுத்திக் கொள்ளும் இடங்கள் பலவுண்டு. ஆனால் மிகுதியாகத் தன்னைச் சிறுமைப்படுத்திப் பேசியவர்கள் மாணிக்கவாசகரும், இராமலிங்கரும் ஆவர். தற்சிறுமைச் செயல்கள் தேவாரங்களிலும் காணப்படுகிறது. ஆனால் திருவாசக அளவு இல்லை என்பது வ.சுப.மாணிக்கத்தின் கருத்தாகும்.

தேவாரம் சைவ இயக்கப் பாடல், சமண பௌத்த மதச் செல்வாக்குகளைத் தகர்த்து சைவத்தை நிலைநாட்ட வந்த பறவு பாடல் என்றும், தலந்தோறும் சென்று மக்களைத் திரட்டி சிவனது பெருமையையும், திருவருளையும் இசைத்துப் பாடி பரப்பிய மன்பதைப் பாடல் என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார்.

## திருவாசகத்தில் தற்சிறுமை

வ.சுப.மாணிக்கம் திருவாசகத்தைத் தனிநெறிப்பாடல் என்றும், உயிர்பாடல் என்றும் கூறுவார். இப்பாடல் உயிரியக்க பாடலன்று, உயிரொடுக்கப் பாடலாகும் என்கிறார். இக்கருத்தை நிறுவும் விதமாக, இன்பே அருளி எனையுருக்கி உயிருண்கின்ற எம்மானே

> ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு
> என் உள்ளமும் போய்

என்ற அமுதவரிகளைச் சுட்டியுள்ளார்.

திருவாசக உயிருண்ணிப் பத்தில்,

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்
பேர் வேண்டேன்

என்ற திருவாசகச் செய்யுளுள் தன்னைப் பிறன் போற் கூறும் படர்க்கை நடையில் அமையாது நாடக நடை எனப்படும். தன்மை நடையில் பெயர் சுட்டி கூறாது அமைந்துள்ளன என்றும் உயிரையே ஒடுக்க நினைத்தவார்க்குப் பெயரொடுக்கம் எம்மாத்திரம் என்று வ.சுப. மாணிக்கம் வியக்கும் விதமாகத் திருவாசகம் அமைந்துள்ளது.

## முடிவுரை

திருவாசகத்தில் தற்சிறுமைக் கோட்பாடு எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள்:

பக்தி இலக்கியங்கள் அனைத்தும் தற்சிறுமைக் கோட்பாட்டைத் தன்னுள் கொண்டு விளங்குகிறது.

இறைவனை அடைவதற்குச் சரணாகதி தத்துவமே சிறந்தது என்பர். இறைவன் முன்பு தன்னை முழுமையாக இத்தத்துவத்திற்கு ஆட்படுத்திக் கொள்வதால் விரைந்து முக்தி கிட்டும் என்ற நோக்கில் இப்பாடல்கள் பாடப்பட்டு உள்ளன.

## துணைநூற் பட்டியல்

1. ப.அருணாசலம், பக்தி இலக்கியம், பாரி புத்தகப்பண்ணை – 1983.
2. ஆ.க.பார்த்தசாரதி, பெரியாழ்வார் பாசுரங்கள் - ஓர் ஆய்வு – பரணி வெளியீடு – 1992
3. இ.ரா.வ.கமலக்கண்ணன் (உரை) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் - வர்த்தமானன் - பதிப்பகம் - 2001.
4. வ.சு.ப.மாணிக்கம்,இலக்கியச் சாறு, மணிவாசகர் பதிப்பகம் - 20010
5. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரை) சிலப்பதிகாரம் - சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் - 1984.
6. ச.வே.சுப்ரமணியன், தொல்காப்பியம் - மணிவாசகம் பதிப்பகம் - 2000